**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. 1 COURT, NAMAKKAL.**

**CC.No.410/2022**

**PW - 2**

| | | |
|---|---|---|
| **PW. 2 Cross** | சதீஷ்குமார் த/பெ.பழனிசாமி | 22.01.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the Date: 22.01.2025

**(எதிரிகள் ஆஜர்)**

எதிரி தரப்பில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 311–ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு MP.No.2/2024 –ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் மீண்டும் சாட்சியை அழைக்கப்பட்டு செய்யப்படும் குறுக்கு விசாரணை –

**விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 04.46 மணி**

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :–**

1) 1ம் எதிரி பழனிசாமியின் மனைவி சாந்தி எனது கோழிப்பண்ணையில் வேலை செய்து வந்தாரா என்றால் ஆமாம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகின்ற தேதிக்கு முன்பு எத்தனை ஆண்டுகளாக வேலையில் இருந்து நின்றுவிட்டார் என்றால் 6 மாத முதல் ஒரு வருட காலம் இருக்கும். சாந்திக்கும், எங்களுக்கும் வேலைபார்த்த வகையில் பண வரவு செலவு இருந்தது என்று சொன்னால் சரிதான். சம்பவ சமயத்தில் சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடத்தில் சுமாராக எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் அந்த சமயத்தில் யாரும் இல்லை, எதிரிகள் மூவரும் மட்டும்தான் இருந்தார்கள், பின்னர் மற்றவர்கள் வந்தார்கள்.

2) சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் நான் குடியிருக்கும் இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 300 முதல் 500 மீட்டர் தொலைவு இருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் எதிரி குடியிருக்கும் இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 50 முதல் 100 மீட்டர் தொலைவு இருக்கும். போலீசார் என்னை விசாரிக்கும்போது, நான் சென்ற கார் மற்றும் அதன் பதிவு எண் குறித்து கூறவில்லை. நான் இந்த வழக்கு சம்மந்தமாக நான் எப்போது புகார் கொடுத்தேன் என்றால் இரண்டு நாட்கள் கழித்து புகார் கொடுத்தேன்.

3) நான் மருத்துவமனை சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் சேரவில்லை என்றால் சரிதான். வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் நானும், எனது தகப்பனாரும் சாந்தி மற்றும் எதிரிகளை ஜாதி பெயர் சொல்லி திட்டியதாகவும், இரண்டு சக்கர வாகனத்தை சேதப்படுத்தியதாகவும், வீட்டின்

கண்ணாடியை உடைத்தாகவும் வேலக்கவுண்டம்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார் என்றால் ஆமாம், ஆனால் உண்மை இல்லை. அதன் அடிப்படையில் குற்ற எண்.46/2022 என்ற முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது, ஆனால் புகார் கொடுத்திருந்த விவரமும், அதன்பேரில் விசாரணை நடந்த விவரமும் தெரியும்.

4) மேற்படி விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னாலும், இந்த வழக்கில் இருந்து தப்பிக்க வேண்டி வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டதாக இந்த புகாரை கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சாந்தி கொடுத்த புகார் உண்மை வழக்கு என்பதால் மேற்படி வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் மீது பொய்யான இந்த புகாரை கொடுத்து அதற்கு ஆதவாக சாட்சியம் அளித்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னாலும், எதிரிகள் எந்தவொரு குற்ற சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

(விசாரணை முடிவுற்ற நேரம்:– மதியம் 04.56 மணி )